தார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் இந்த மலர்க் காட்சியையும், பழக்காட்சியையும் நாமே எடுத்து நடத்தலாமா என்று அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

(முற்பகல் 9—50.)

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மலர்க் கண்காட்சிக்கு வருடம் ஒன்றுக்கு எத்தனை பேர்கள் பார்வையாளர்களாக வருகிறார்கள்? கொடைக்கானலில் இந்த மலர்க் கண்காட்சியை நடத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, வருடம் ஒன்றுக்கு ஏறத்தாழ 60,000 பேர்கள் அந்த மலர்க் கண்காட்சியைக் காண வந்திருக்கிறார்கள். பழக் கண் காட்சிக்கு ஏறக்குறைய 12,000-க்கு மேற்பட்டவர்கள் வந்திருக் கிறார்கள். கொடைக்கானலைப் பொறுத்த வரையில் இது போன்ற மலர்க் கண்காட்சி, பழக் கண்காட்சியை ஏற்படுத்த லாமா என்பதை அரசு இனிமேல் பரிசீலனை செய்யும்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, நீலகிரி, கொடைக்கானல் ஆகிய இடங்களில் நடத்துவதைபோல், எங்களுடைய வட ஆற்காட்டில் உள்ள ஏலகிரி மலையிலும், சேலத்தில் உள்ள ஏற்காடு மலையிலும் இப்பேர்ப்பட்ட மலர்க் கண் காட்சி,பழக் கண்காட்சிகளை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஏலகிரி மலையிலும், ஏற்காடு மலையிலும் நடத்துவதற்கு, சுற்றுலா பயணிகள் வரக் கூடிய ஸ்தலமாக இருக்குமா என்று ஆராய்ந்து பார்த்து, பிறகு முடிவு எடுக்க முடியும். ஆகவே, அதைப் பார்த்து இதற்கு விடை பின்னால் சொல்கிறேன்.

கிழக்கு இராமநாதபுரத்தில் பனைத் தொழில்கள்.

*வினா எண். 799—திரு. வ.மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கோடிக்கணக்கான பனைமரங்களிலிருந்து கிடைக்கும் மூலப் பொருள்களை உபயோகப்படுத்தும் வகையில் குடிசைத் தொழில் ஏற்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் ஏதேனும் உள்ளதா?

1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வ. மு. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இந்தக் குடிசைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு வங்கியின் மூலம் கடன் பெற்றுத் தர முடியுமா? எத்தனை பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன? அவைகள் எங்கெங்கே என்று சொல்லமுடியுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இப்போது நாம் பனைத் தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு கடனாகவும், மான்யமாகவும் வங்கியின் மூலமாகவும், கதர் கைத் தொழில் வாரியத்தின் மூலமாகவும் கொடுத்துக் கொண்டு வருகிறோம். உறுப்பினர் அவர்கள் இந்தத் திட்டத்தை வேறு எங்கெங்கே வைத்திருக்கிறார்கள் என்று கேட்டிருக்கிறார்கள். 1977–78ம் ஆண்டு கிட்டத்தட்ட 36 சங்கங்களுக்கு உதவியும், 41 இடங்களில் நிதி உதவிக்கான திட்டங்களை வைத்திருக்கிறோம். அது நீண்ட பட்டியலாக இருக்கிறது. மொத்தம் 77 சங்கங்களுக்குக் கூடுதல் உதவியும் பயிற்சியும் அளித்து வருகிறோம்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பனைப் பொருள்களில் இருந்து கிடைக்கும் மூலப் பொருள்கள், அதாவது நுங்கு கெட்டுப் போகாமல் 3 மாதங்கள் வரை வைத்துக்கொள்ள முடியும் என்று மதுரை யூனிவர்சிடியில் கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படி 3 மாதங்களுக்கு கெட்டுப் போகாமல் வைத்துக் கொள்ளும் முறை கண்டுபிடிக்கப்பட்டால் வெளி நாடுகளுக்கு அனுப்பக்கூடிய தன்மையை உண்டாக்க முடியும். அதனால் வருவாயைப் பெருக்க முடியும். ஆகவே, அந்த நுங்கை கெட்டுப் போகாமல் வைத்துக் கொள்வதற்கு ஏதாவது முறை இருக்கிறதா என்பதைத் தெரியப்படுத்த வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, பனை நுங்கைப் பாதுகாத்து வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும் என்று அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அது கிடைக்காத காலங்களில், அதைத் திரும்பவும் சந்தைக்கு எடுத்துச் சென்று விற்று பனைத் தொழிலாளர்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்ய வழிவகைகளை அரசு செய்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, ஒரு 3 மாத காலம் வரை அந்த நுங்கு கெட்டுப் போகாமல் வைத்துக் கொள்ளக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. மேலும் நீண்டகாலத்திற்கு வைக்கலாமா என்பதைக் கண்டுபிடிக்க இப்

[* 304—306-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

போது ஆராய்ச்சி செய்து வருகிறோம். நிச்சயமாக அந்த நுங்கை பாதுகாத்து வெளிநாடுகளுக்கு அனுப்பவும், கிடைக்காத காலங்களில் அதைத் திரும்பவும் சந்தைக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்வதில் அந்தப் பனைத் தொழிலாளர்களுக்கு நல்ல விலை கிடைக்க அரசு வழி செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஞானசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை செங்கற்பட்டு மாவட்டத்திற்கு மட்டுமல்லாமல் மற்ற எல்லா மாவட்டங்களிலும் உள்ள இந்தப் பனைத் தொழிலாளர்கள் அனைவரையும் சேர்த்துக் கொள்வதற்கு இந்த புது முறை ஏன் விஸ்தரிக்கப்படவில்லை என்பதை தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இது மாநில அளவில் இருக்கக் கூடிய பனைத் தொழில்கள் கூட்டுறவு மையத்தின் மூலமாக இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. விவசாயப் பல்கலை கழகம், மற்ற பல்கலைக் கழகங்கள் மூலமாக அந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு ஒரு முடிவிற்கு வந்திருக்கிறோம். நுங்கு 3 மாதங்கள் வரை கெடாமல் பாதுகாக்க முடியும் என்று ஆராய்ச்சியின் மூலம் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் கூடுதலாக 6 மாதம், 9 மாதம் வரை வைத்துக்கொள்ள முடியுமா என்பதைப் பற்றியும் ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. பிறகு எங்கெங்கே இந்தப் பனைத் தொழிலாளர்கள் இருக்கின்றார்களோ, அங்கெல்லாம் அவர்களிடமிருந்து இந்த நுங்கை வாங்கி அவர்களுக்கு கூடுதல் விலை கிடைப்பதற்கான முயற்சி எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, சுமார் 87 சங்கங்களுக்கு நிதி உதவி செய்திருப்பதாக—மாநிலம் முழுவதிற்குமாக—அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாவட்ட ரீதியான விவரம் என்ன என்பதையும், மாவட்டங்களில் இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு என்ன திட்டம் இருக்கிறது என்பதையும் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, பனையோலையிலிருந்து முடைகிற பாய், மற்றும் பனைப் பொருட்களிலிருந்து உப தொழில்களை ஆரம்பிக்க எல்லா மாவட்டங்களுக்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது. மூலக் கேள்வி முகவை மாவட்டத்தைப் பற்றி கேட்டிருப்பதால் இந்த விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. வட ஆற்காடு மற்றும் பிற மாவட்டங்களைப்பற்றியெல்லாம் விவரங்கள் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட்டால் விவரங்களை தெரிவிக்கலாம்.